DEPOSITION OF WITNESS
(In the Court of the Principal District Munsif, Sankarankovil)

**O.S. No. 404/2015**

| | |
|---|---|
| Deposition of Witness for | : PW2 |
| Name | : காசிலிங்கம் |
| Father Name | : -- |
| Village | : ஆலமநாயக்கன்பட்டி |
| Taluk | : -- |
| Caste | : -- |
| Calling | : கூலி |
| Religion | : இந்து |
| Age | : -- |
| Date | : 24.06.2019 |

Solemnly affirmed in accordance with provision of act 1873 on the day of 24th June 2019.

**முதல் விசாரணை :**

நான் ஆலமநாயக்கன்பட்டி கிராமத்தில் குடியிருந்து வருகிறேன். வாதியை எனக்கு நன்கு தெரியும். எனது சத்தியப்பிரமாண நிரூபண வாக்குமூலம் தாக்கல் செய்கிறேன். மேற்படி வாக்குமூலத்தை படித்து பார்த்து அதில் நான் கையொப்பம் செய்திருக்கிறேன். நான் தாக்கல் செய்துள்ள நிரூபண வாக்குமூலத்தை எனது தரப்பு முதல் விசாரணையாக ஏற்றுக் கொள்ள பிரார்த்திக்கிறேன்.

**குறுக்கு விசாரணை :**

எனது சொந்த ஊர் ஆலமநாயக்கன்பட்டி. எங்கள் ஊர் கரிசல்குளம் ஊராட்சியில் அமைந்துள்ளது. இந்த வழக்கில் சாட்சியம் அளிக்க நீதிமன்றத்திலிருந்து எனக்கு அழைப்பாணை வந்ததா என்றால் இல்லை. என்னை யார் சாட்சியம் அளிக்க அழைத்து வந்தார் என்றால் வாதி கோபால்சாமிநாயக்கர் என்னை சாட்சியம் அளிக்க அழைத்து வந்தார். வாதி

கோபால்சாமிநாயக்கர் எனக்கு மாமா உறவுமுறை வேண்டும். வாதியின் வீடும் எனது வீடும் அருகருகே உள்ளது. வாதியும் நானும் ஒரே சமூகத்தை சார்ந்தவர்கள் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை :** இல்லை.